**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No.01/2024** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | விஜயப்பிரியா |
| Father's /Husband Name | : | சக்திவேல் |
| Village | : | சீதக்கமங்கலம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 31 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 01st day of August 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சீதக்கமங்கலம் கிராமத்தில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். சாட்சி பஞ்சவர்ணம் எனது அம்மா. கடந்த 21.12.2017 ம் தேதி நானும் எனது அம்மா பஞ்சவர்ணமும் கும்பகோணத்திலிருந்து மதுரையிலிருந்து நன்னிலம் வழியாக நாகப்பட்டினம் செல்லும் TN 68 N 0806 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் சீதக்கமங்கலம் வீட்டிற்கு செல்வதற்காக வந்து கொண்டிருந்தோம். அப்போது சீதக்கமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகாமையில் விசில் அடித்து இறங்க சொன்னார்கள். நானும்எனது அம்மா பஞ்சவர்ணமும் இருக்கையில் இருந்து எழுந்து நின்றோம். அதன் பிறகு பஸ்சை அந்த ஸ்டாப்பில் டிரைவர் நிறுத்தி நாங்கள் இறங்குவதற்குள் பேருந்தை வேகமாக எடுத்துவிட்டார். அதனால் எனது தாயார் கீழே விழுந்ததில் அவரது இடது பக்க இடுப்பில் காயம் ஏற்பட்டது. அன்றைய தினம் அரசு பேருந்தை இயக்கிய ஓட்டுநர் திருஞானம் ஆஜர் எதிரி தான். காயம்பட்ட பஞ்சவர்ணத்தை சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் M.M.Ortho தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கு சிகிச்சையில் இருந்த போது குடவாசல் போலீசார் வந்து விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம்

என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தாயார் தொடர்ந்து ஒரு மாதம் சிகிச்சை எடுத்து கொண்டு மருத்துவர் ஆலோசனைப்படி ஓய்வில் இருந்து வருகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சம்பவம் நடந்த உடனே குடவாசல் காவல் நிலையத்தில் புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். பேருந்தின் நடுப்பகுதியில் நானும் எனது அம்மாவும் அமர்ந்துள்ளோம். எங்கள் ஊரில் இறங்கக்கூடிய சாலையானது S வடிவில் உள்ளது. எங்கள் ஊருக்கு செல்லும் சாலைக்கு பக்கத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதை தான் போலீஸ் விசாரணையிலும் புகாரிலும் சொல்லியுள்ளேன். எனது தாயாருக்கு இடது கை இயற்கையாகவே ஊனம் உள்ளது என்றால் சரிதான். மறுகையால் பேருந்தில் பிடித்து கொண்டு நிற்பார். நாங்கள் பயணம் செய்த பேருந்தில் படிக்கட்டில் கைப்பிடி உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் தான் முதலில் பேருந்திலிருந்து இறங்கினார். எனது அம்மா தான் பேருந்து நின்ற பிறகு இறங்கும் போது படிக்கட்டிலிருந்து தவறி கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் அடிப்பட்டது சம்மந்தமாக நஷ்ட ஈடு கேட்டு கும்பகோணம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எனது தாயார் காயம்பட்டதற்கு நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.01 11:23:53 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`